**செய்தி வெளியீடு**

**செய்தி வெளியீடு எண்.21/2024** **நாள்** : 04.03.2024

**அடையாறு மண்டலத்திற்குட்பட்ட**
**பணிமனை அலுவலகம்-178 இட மாற்றம்**

**சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்**

சென்னை குடிநீர் வாரியம், அடையாறு மண்டலத்திற்குட்பட்ட பணிமனை அலுவலகம்-178, தற்போது இந்திரா நகர் 2-வது அவின்யு, சென்னை-600 020 என்ற முகவரியில் இயங்கி வருகிறது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) இந்திரா நகர் இரயில் நிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட இருப்பதால் இப்பணிமனை அலுவலகம் 06.03.2024 **(புதன்கிழமை) முதல் புதிய முகவரியான தரமணி கழிவுநீர் உந்து நிலையம், பீலியம்மன் கோயில் தெரு, தரமணி, சென்னை–113** என்ற இடத்தில் செயல்படும்.

எனவே, பொதுமக்கள் குடிநீர் மற்றும் கழிவுநீர் சம்பந்தப்பட்ட புகார்கள் மற்றும் குடிநீர் வரி / கட்டணம் செலுத்தவும் மேற்கண்ட புதிய முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி எண்கள்**

உதவிப் பொறியாளர் - 8144930178

துணை பகுதிப் பொறியாளர் - 8144930239

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater